Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily நேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 4

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 24 ஆம் நாள் றம்ழான் 21 (6-2-64) வியாழக்கிழமை இதழ் 360

# கல்லூரி அதிபர்களுக்கு சிங்களம் கட்டாயம்

## 50 வயதுக்குட்பட்டவர்கள் 2வருடத்தில்தேர்ச்சிபெறவேண்டும்

யாழ்ப்பாணம், வியாழன்

**கல்லூரி அதிபர்களும் தலைமை ஆசிரியர்களும் உத்தியோக மொழியான சிங்களத்தை கட்டாயமாகப் படிக்கவேண்டுமென்றும் உத்தியோகமொழியில்தேர்ச்சிபெறுவதற்குஅவர்களுக்குஇரண்டு வருடஅவகாசம் கொடுக்கப்படுமென்றும்கல்வி இலாகா அறிவித்துள்ளது. ஆனால் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதிக்குப் பின்னர் 50 வயதைத்தாண்டியவர்களுக்கு இந்த உத்தரவு இல்லை. 1961-ம் ஆண்டுக்குப் பின்னரும் ஐம்பது வயதுக்குட்பட்ட கல்லூரி அதிபர்களும் தலைமை ஆசிரியர்களும் இரண்டு வருடத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறவேண்டும்.**

கல்வி இலாகா தனது கருமங்களை உத்தியோக மொழியிலேயே செய்வதால் கல்வி இலாகாவுடன் கல்லூரி அதிபர்களும் தலைமை ஆசிரியர்களும் உத்தியோக மொழியிலேயே தொடர்புகொள்ளவேண்டியிருப்பதாலும் கல்வி இலாகா அனுப்பும் சுற்றுநிருபங்கள், உத்தரவுகள் யாவும் உத்தியோக மொழியிலேயே இருக்குமாதலால் அவற்றை கல்லூரி அதிபர்கள் விளங்கிக்கொள்ளவேண்டியிருப்பதாலும் அவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டியது அவசியம் என கல்வி இலாகா தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதிக்குப் பின்னர் ஐம்பது வயதைத் தாண்டிவிட்டவர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறவேண்டிய அவசியமில்லையெனவும் கல்வி இலாகா தெரிவித்துள்ளது.

### அதிபர்கள் சங்கம் ஆலோசனை

கல்வி இலாகாவின் இச் சுற்றுநிருபம் தமிழ்ப் பகுதிகளிலுள்ள கல்லூரி அதிபர்களையும் கல்லூரி அதிபர்களாகவும் தலைமையாசிரியர்களாகவும் கடமையாற்றும் தமிழர்களையும் வெகுவாகப் பாதிக்கும் எனக் கருதப்படுகிறது.

வடபகுதி கல்லூரி அதிபர்கள் சங்கம் சென்ற திங்கட்கிழமை கூடி இச் சுற்றுநிருபம் பற்றி ஆலோசனை செய்ததாகவும் இதுபற்றி மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதாயின் கல்லூரி அதிபர்கள் சங்கத்தைத் தொழிற்சங்கமாகப் பதிவுசெய்யவேண்டியது அவசியமெனக் கருதி அதற்கான முயற்சிகளைச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

## தமிழ்பகுதி ஸ்தலஸ்தாபன தலைவர்கள் மகாநாடு: பூரண ஒத்துழைப்பு தருவதாக யாழ். மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழ்ப்பகுதிகளில் உள்ள ஸ்தலஸ்தாபன சபைகளில் உத்தியோக மொழியைத் திணிக்கும் நடவடிக்கையை எதிர்ப்பது பற்றியும், தமிழ் தெரியாத உத்தியோகத்தர்களைத் தமிழ்ப்பகுதி ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு நியமிப்பது பற்றியும் ஆலோசனை செய்து தமிழ்ப் பகுதி ஸ்தலஸ்தாபன சபைகளின் கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்காகத் தமிழ்ப்பகுதி ஸ்தலஸ்தாபன சபைத் தலைவர்களின் மகாநாடு இம் மாதம் 8-ந் திகதி சனிக்கிழமை திருக்கோணமலை நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டுக்கான யோசனையைத் தெரிவித்த திருக்கோணமலை நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தம் மகாநாட்டுக்கு வருமாறு தமிழ்ப் பகுதி ஸ்தலஸ்தாபனத் தலைவர்களை அழைத்துள்ளார்.

### யாழ்ப்பாணம் ஒத்துழைப்பு

திருக்கோணமலை நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தம் அனுப்பிய அழைப்பை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா அனுப்பியுள்ள பதிலில் தமது உடல்நிலை காரணமாக மகாநாட்டில் கலந்துகொள்ள முடியாதிருக்கிறதென்றும் மகாநாடு என்ன முடிவுசெய்கிறதோ அந்த முடிவை ஏற்று அதற்குப் பூரண ஒத்துழைப்பு அளிக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

## "தமிழ் உரிமை இயக்கத்தில் சகலரும் சேரவேண்டும்" யாழ்ப்பாண மேயர் அழைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ் பேசும் இனம் வாழவேண்டுமேயானால் சிங்கள எதிர்ப்புப் போராட்டம் நடாத்தியே தீரவேண்டும். அப்படியான ஒரு போராட்டம் யார் ஒழுங்கு செய்தாரென்றில்லாது ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் அப்போராட்டத்தில் கலந்து வெற்றியுடன் உரிமையை நிலைநாட்ட வேண்டியதே கடமை எதிர்வரும் 17-ந் திகதி நடாத்தப்படும் தமிழ்ப் போராட்டத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மேயர் திரு. ரி. எஸ். துரைராசா யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற துக்கதின பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார். இக் கூட்டத்திற்கு காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமைவகித்தார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசியதாவது:

தமிழ் உரிமைப் போராட்டத்திற்குத் தமிழ் அரசியல் தலைவர்கள் அத்தனை பேரையும் ஒன்றுபடுத்தினல்தான் ஏகோபித்த உரிமைக்குரலாக அமையும்என்பதுதவறு. தமிழ் உரிமைக்காக ஒரு போராட்டத்தை ஒழுங்குசெய்ய வேண்டியதை எல்லோரும் ஏற்

(6-ம் பக்கம் பார்க்க)

## விடுமுறைக்கு வெளிநாடு செல்வோர் பணம் கொண்டுசெல்ல முடியாது

கொழும்பு, புதன்

விடுமுறைக்காக வெளிநாட்டுக்குச் செல்பவர்களுக்கு அந்நிய செலாவணி வழங்குவதை நிறுத்துவதென்று அரசாங்கம் இன்று தீர்மானித்தது. வெளிநாட்டு ஆஸ்தி வீழ்ச்சியடைந்து வருவதைத் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதென இன்று கூடிய மந்திரிசபை முடிவு செய்தது. இந்த நடவடிக்கைகளில் ஒன்றுதான் விடுமுறைக்காக எந்த நாட்டுக்குச் செல்பவர்களுக்கும் அந்நிய செலாவணி வழங்குவதில்லையென்ற முடிவாகும். வெளிநாட்டு மூலதன நிலைமை செப்டம்பர் மாதத்துக்கிடையில் அபிவிருத்தியடையுமென நிதி மந்திரி கருதுவதால், அந்நிய செலாவணியை அனுமதிக்கும் விஷயம் பின்னர் புனராலோசனை செய்யப்படும்.

யாத்திரை செய்பவர்களுக்கு அலவன்ஸ் மற்றும் பிரயாண வசதி செய்வதைக் குறைப்பது சம்பந்தமான முடிவு எதுவும் செய்யப்படவில்லை. இப்பொழுது, ஐரோப்பாவுக்கு யாத்திரை செய்பவர்களுக்கு அடிப்படை அலவன்ஸ் நூறு பவுணும் இந்தியாவுக்கு யாத்திரை செய்பவர்களுக்கு நூற்றி ஐம்பது ரூபாயும் வழங்கப்படுகிறது.

புகையிலை – மிளகாய் – கத்தரி – முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

## மணிவாக்கு

இன்று விஞ்ஞானத்தின் ஆற்றல் பெருகியிருக்கிறது. அதுபோல், பட்டினியும் பெருகியிருக்கிறது. விஞ்ஞானத்தால் உற்பத்தி பெருகி உலகம் செழிப்புறுவதற்கு மாறாக உலகம் வறுமையில் வாடியிருக்கிறது. இது மிகவும் விசித்திரமாக இருக்கிறது.

— விநோபாஜி

ஈழநாடு
EELA NADU
ELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு தை மீ 24 உ (6-2-64)

## நல்ல சந்தர்ப்பம்

சுதந்திரமடைந்த பதினறு ஆண்டுகளில் இலங்கை மாதாவுக்கு இன்றுபோல் நெருக்கடிகளும் சோதனைகளும் இதுவரை எப்பொழுதும் ஏற்பட்டதில்லை. இந்நிலையில் இந்நாட்டின் இருபெரும் சமூகங்களில் ஒன்றான தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்று நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை பிரதமர் நழுவவிடுகிறார் என்றே நமக்குத் தோன்றுகிறது.

விலைவாசிகள் விஷம்போல் ஏறியுள்ளன. அந்நிய செலாவணி, அரசாங்கமே எதிர்பாராத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. வேலை நிறுத்தங்கள் ஒருபுறம்; நாட்டு மக்களுக்குள் இன, மத, மொழி வேறுபாடு ஒருபுறம். இதேசமயம் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப் பலம் வேறு குறைந்து எந்த நேரத்தில் என்னவாகுமோ என்ற அச்சம் ஒருபுறம், தீராத பிரச்சினையான இந்திய வம்சாவளியினர் பிரச்சினையும் சட்ட விரோதக் குடியேற்றப் பிரச்சினையும் வேறொருபுறம். இவ்விதம் பல நெருக்கடிகளை இலங்கை மாதா எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நாட்டு மக்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டியது மிகமிக அவசியமென்பதை பிரதமர் உள்ளிட்டு நாட்டுநலனில் அக்கறை கொண்ட அனைவரும் உணர்வர்.

அரசியல் சுதந்திரமடைந்தும் சமூக பொருளாதார சுதந்திரம் அடையாவிடில் அரசியல் சுதந்திரத்தினால் எவ்வித பயனும் ஏற்படாது. காலியில் நடைபெற்ற சுதந்திர தினவிழா வைபவத்தில் நமது பிரதமர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலும பொருளாதார சுதந்திரத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். நாட்டின் பொதுவிரோதிகளான இல்லாமையையும் வறுமையையும் போக்கடிக்க வேண்டுமெனக் கூறிய பிரதமர் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதென்ற உண்மையை எடுத்துக்கூறி அவர்களுக்கு நீதி வழங்கவேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தி பெரும்பான்மை மக்கள் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டாலே நாடு முன்னேற முடியுமென்பதையும் எடுத்துக் கூறியிருந்தால் இருபகுதி மக்கள் மனதிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்.

நாட்டின் இன்றைய மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் இருபெரும் சமூகங்களுக்கிடையிலும் நிலவும் வேற்றுமைதானென்பதையும் இந்த வேற்றுமைக்கு மொழி முதலிய சில சட்டங்களே தான் காரணமென்பதையும் சில தீவிரவாதிகளைத் தவிர மிதான புத்தி படைத்தவர் அனைவரும் ஒப்புக் கொள்வர். இப்பொழுது சில அரசியல் கட்சிகள் கூட தங்களது பழைய கூச்சலைக் குறைத்துள்ளது ஒரு நல்ல சூழ்நிலை. தீவிரவாதிகளின் நிர்ப்பந்தத்துக்கு ஆரம்பத்தில் பணிந்த காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பின்னர் தமது தவறை உணர்ந்து சிறுபான்மையினருக்கு அவர்களுடைய நியாயமான உரிமைகளை வழங்க வேண்டிய தன் அவசியத்தை பெரும்பான்மை மக்களுக்கு துணிந்து எடுத்துக்கூறி வந்தார். துரதிர்ஷ்டவசமாக அவர் அகால மரணமடைந்ததால் அவரது முயற்சி தடைப்பட்டது. காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறிச் சொல்லும் இன்றைய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் அவரது அரசாங்கமும் சிறுபான்மையினருக்கு தீங்கிழைக்கும் நோக்கமில்லையென்றும் அவர்களுக்கு அவர்களது அடிப்படை உரிமைகள் வழங்கப்படுமென்றும் ஒரே பல்லவியைத் திருப்பத் திரும்பப் பாடிக் கொண்டிருப்பதால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாதென்பதை உணர்ந்து காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையைச் செயலில் நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு இப்பொழுது மற்றொரு நல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளது. இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினரின் மதிப்புக்கும் மரியாதைக்கும் வணக்கத்துக்குமுரிய மல்வத்த மதபீடத் தலைவர் அமுனுகம ராஜகுரு விபாசி மகாநாயக தேரோ சுதந்திர தினத்தை யாட்டியும், மல்வத்தை மதபீடத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட உடனும் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்திகளில் நாட்டில் சகல சமூகங்களுக்கிடையிலும் ஐக்கியமும் சமாதானமும் நிலவ வேண்டிய அவசியத்தையும் மற்றவர்களின் உரிமைகளை மதிக்க வேண்டியதன் அத்தியாவசியத்தையும் உணர்த்தியிருப்பது சுபசகுணம். மல்வத்த மதபீடத் தலைவரைச்சந்தித்த கண்டி பிஷப்பும் நாட்டில் ஐக்கியம் நிலவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

மகாநாயக்கதேரோவின் இச்சமாதான வேண்டுகோளையும் முயற்சியையும் பயன்படுத்தி சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நீக்கி, அவர்களுக்கு அவர்களதுநியாயமான அடிப்படை உரிமைகளை வழங்க முயற்சி செய்ய வேண்டியது பிரதமரின் கடமை. இதற்கு இன்றுள்ளதுபோன்ற நல்ல சந்தர்ப்பம் வேறு இல்லை. இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தேசியப் பிரச்சினைகளுக்கு தேசியரீதியில் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு பிரதமரின் கையில் தானுள்ளது.

## "இந்தியரை நாடுகடத்தலாம்: இம்சிக்கக் கூடாது"

### 'தினமின' புத்திமதி

"இந்தியர்களுக்கு இம்சை செய்யாதீர்" என்ற தலைப்பில் 'தினமின' என்ற சிங்களப் பத்திரிகை இம்மாதம் முதல் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது.

சட்ட விரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது பொலிசாரால் இம்சைக்குள்ளானதைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கிடையில் ஓரளவு அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

சட்டத்தை மீறுபவர்கள் கூட பொலிசாரினால் தண்டிக்கப்பட முடியாது. தண்டிப்பது நீதிமன்றத்தின் வேலை. சட்டத்தை மீறுவோரை பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

உண்மையில் சட்ட விரோதக் குடியேற்றக்காரரை இம்சை செய்வது மனிதாபிமான மற்ற செயல். இதற்கு மாறாக அவர்களை நாடுகடத்தினால் போதும். சட்டவிரோதக் குடியேற்றம் நாட்டிற்குப் பெருந் தலையிடி என்பதில் ஐயமில்லை. ஆனால் இது இரு நாடுகளுக்கிடையிலும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. அதுவரை சட்ட விரோதக் குடியேற்றம் அதிகரிப்பதைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்நாட்டிலுள்ள இந்தியர்கள் பொலிசாரின் பாதுகாப்பின் கீழுள்ளவர்கள். அவர்களை வேதனைப்படுத்த முடியாது. தோட்டத் தமிழர்கள் மத்தியில் அமைதியின்மையும் அதிருப்தியும் ஏற்படுவது நாட்டுக்குத் தீங்காவதுடன் அதனால் மோசமான விளைவுகளும் ஏற்படக் கூடும்.

பொலிஸ் உயர்தர அதிகாரிகள் என்ன நடைபெறுகிறதென்பதை அறிந்து இம்சை விளைப்பதை நிறுத்த உத்தரவிடமுடியாவிடில், இவ்விஷயத்தில் தலையிட்டு நிலைமையைச் சீராக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

"லங்காதீப" என்ற சிங்களத்தின சரியில் 'சந்திரகுப்தா' எழுதும் பத்தியில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய தொழிலாளர்களை இந்திய அரசாங்கம் திருப்பி அழைக்க மறுத்தது பற்றி பொது மக்களின் கவனம் இவ்விஷயத்தில் திருப்பியுள்ளது. தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களை 'நாடற்றவர்கள்' என்று இந்திய அரசாங்கம் அழைக்கிறது. இந்த "நாடற்றவர்கள்" என்ற பதம் இலங்கையில் முன்பு இந்திய ஹைகமிஷனராக விருந்த திரு. வி. தேசாயினால் உண்டாக்கப்பட்டது. 'நாடற்றவர்கள்' என்ற இப்பதத்தை அரசாங்க தஸ்தாவேஜுகளிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

உலகின் எந்தப்பகுதியிலிருந்தாலும் அங்குள்ள இலங்கையரை 'இலங்கையன்' என்று பெருமையுடன் இலங்கை அங்கீகரிக்கிறது. ஆனால் இந்தியா, இலங்கையிலுள்ள 'இந்தியரை' தனது மக்கள் என்று ஏற்றுக்கொள்ள மறுக்குமளவுக்கு தாழ்ந்துள்ளது.

இந்த நாட்டின் எதிர்காலத்தையிட்டு கருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர் பிரதம மந்திரியா தொண்டமானா என்பதை நாம் கண்டு கொள்ள வேண்டிய சமயம் வந்து விட்டது. பிரதம மந்திரியின் அங்கீகாரத்துடன்தான் சட்டவிரோதக் குடியேற்றத் தொல்லையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை பொலிசார் மேற்கொண்டனர் என்பதில் ஐயமில்லை. இதற்குத் தடையாயிருப்பவர் திரு. தொண்டமான் தான். சட்ட விரோதக் குடியேற்றக்காரரைக் கைது செய்வதை ஆட்சேபிக்கும் தொண்டமான் தோட்டத்தில் வேலை நிறுத்தம் செய்யப்படுமென மிரட்டுகிறார். திரு. தொண்டமான், தான் ஒரு அரசாங்க எம். பி யென்பதை நினைவில் கொள்ள வேண்டியதுடன், அரசாங்க எம். பி யாக இருந்து கொண்டு அவரது செயலை இன்னும் சகித்துக் கொள்ள வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்வதற்குப் பொது மக்களுக்கு உரிமை உண்டு.

தொண்டமான் போன்றவர்களால் இந்நாடு ஆளப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் விருப்பமானால் அதை அரசாங்கம் ஏன் வெளியாகச் சொல்லிவிடக் கூடாது.

தோட்டப்பகுதிகளைச் சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களால் நிரப்பி, சிங்களவர்களின் உரிமைகளை நாசமாக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இயக்கம் வெற்றிபெற்றுள்ளது. இந்த இயக்கத்துக்கு திரு. தொண்டமானும் உடந்தையென்பதை அவரது செயல் காட்டுகிறது.

## "சிங்கள இரத்தம் நல்லது சிங்களம் கூடாதோ?"

இம்மாதம் மூன்றாம் திகதிய 'தவச' பத்திரிகையில் 'இரத்தமும் சிங்களமும்' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் இரத்த வங்கி காலியாக இருப்பதால் இரத்த தானம் செய்யுமாறு, அரசாங்க அதிபர் யாழ்ப்பாண மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. வழமையில் இதர மாகாணங்களிலிருந்து தான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்தம் போவதுண்டு. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இதர மாகாணங்களிலிருந்து இரத்தம் கிடைக்கவேண்டியது அவசியமென்பதையே அரசாங்க அதிபரின் கோரிக்கையும் உணர்த்துகிறது.

சிங்களவர்களின் இரத்தம் நல்லதென்றால் சிங்களத்தை எதற்காக வெறுக்கவேண்டும்? காங்கேசன்துறை பட்டின சபைக் காரியதரிசியாக ஒரு சிங்களவர் நியமிக்கப்பட்டபோதிலும் அவர் அங்கு வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை. சிங்களம் தெரியாத தமிழர் பலர் சிங்களப் பகுதிகளில் வேலை செய்கின்றனர். சிங்களவர்களின் தலைமுடியை வெட்டவேண்டாமென்று சமஷ்டித் தலைவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள சவரத் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தபோதிலும், தமிழர்களின் கடைகளைப் பகிஷ்கரிக்குமாறு சிங்களத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்து நியாயமற்றமுறையில் நடந்துகொள்ளவில்லை. என்றாலும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கியை நிரப்புவதற்குச் சிங்களவர்கள் இரத்தம் கொடுத்து உதவவேண்டும். தமிழர்களின் உடலில் செலுத்தப்படும் சிங்கள இரத்தம் சிங்களத்தின் மீதுள்ள வெறுப்பை நீக்கக்கூடும்.

## தொண்டர்கள் பதிவு

கொடிகாமம், புதன்

தமிழரசு கட்சியின் நேரடி நடவடிக்கையில் சலந்துகொள்வதற்காக சாவகச்சேரி தொகுதியில் சென்ற வாரம் முதல் தொண்டர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்துவருகிறார்கள்.

ஏற்கனவே தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ள பழைய தொண்டர்களும், புதிய தொண்டர்களும் சாவகச்சேரி எம். பி. திரு வி.என். நவரத்தினம்மூலம், தங்கள் பெயர்களை பதிவு செய்வதில் அதிக அக்கறைகாட்டி வருகிறார்கள். இத்தொண்டர்களுக்கு, நேரடி நடவடிக்கையின்போது நடந்து கொள்ள வேண்டிய முறைபற்றி பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மகாசிவராத்திரி 12-3-64

திருக்கேதீசரம் சிவானந்த குருகுலம் முகாமைக்காரர் திரு. க. வைத்தியநாதன் மகா சிவராத்திரிதினம்பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:—

ஸ்ரீ முன்னேஸ்வர ஆலய கும்பாபிஷேக பிரதம குருவாகவும், அங்கு தனது 'சைவசமயத்திருக்கோவிற் கிரியைநெறி' என்னும் நூலை, கும்பாபிஷேக மலருக்கு ஒரு வெளிகாட்டியாகப் பிரசுரஞ்செய்து கௌரவஸ்தானத்தையடைந்தவரும் இலங்கையின் சமஸ்கிருத பட்டதாரியும் இந்தியாவில் 'கலாநிதி' என்ற பட்டத்தைப்பெற்று, பேராதனை சர்வகலாசாலையில் பேராசிரியராகக் கடமையாற்றுபவருமாகிய சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்குத் திருக்கேதீச்சரம் குருகுலம் வெளியீடாகிய 'நவராத்திரி—சிவராத்திரி விரத நிர்ணயம்' என்னும் வெளியீட்டை அனுப்பியிருந்தேன். அதற்குக் குருக்களவர்கள் மனமுவந்து அனுப்பிய மதிப்புரை பின்வருமாறு:-

"தங்களது செப்டம்பர் 20-ந் திகதிக் கடிதத்திற்கும் அதனுடன் சேர்த்தனுப்பிய சோபகிருது வருஷ நவராத்திரி—சிவராத்திரி விரத நிர்ணயம் பற்றியவெளியீட்டிற்கும் எனது உளங்கனித்த நன்றி. குறித்த வெளியீடு மிகவும் பயனுள்ளது. இந்துசமயிகளுக்கு சோபகிருது வருஷ நவராத்திரி—சிவராத்திரி பற்றிய மாறுபட்ட கருத்துக்களை அது தெளிவாக விளக்குவதுடன் உண்மையையும் வெளிப்படுத்துகின்றது. அவ் வெளியீட்டில் இடம் பெறும் கருத்துக்களுக்கு எனது கருத்து மாறுபட்டதன்று. எனவே அது உள்ளடக்கியுள்ள கருத்துக்களுக்கு முரணாக நான் எதவும் கூறுவதற்கில்லை. கடந்த ஏப்ரல், மே மாதங்களில் நான் இந்தியாவில் நின்றபோது மேற்படி நூலினை எழுதிய சைவாகம சாஸ்திரங்களைக் கற்றுத்துறைபோகிய சைவப் பேரறிஞர்களாகிய மூவரை நேரிற் பார்க்க நேர்ந்தது. அம் மூவரும் இப் பிரச்சினைபற்றித் தங்களுக்குக் கடிதங்கள் வந்துள்ளதாக எனக்குக்கூறி என்னுடன் அப் பிரச்சினைபற்றிப் பொதுவாகக் கலந்து பேசினர். அக் கடிதங்களுக்குத் தாம் பதில் எழுதப் போவதாகவும் என்னிடம் கூறினர். அந்த மூன்று அறிஞருள்ளும் கண்டனூர் அரு. இராமநாதக்குருக்கள் அவர்களின் புலமைக்கு நான் பெருமதிப்புக் கொடுக்கின்றேன். அவருடன் கலந்து பேசுவதே தனியின்பம். அவருடன் பேசிய சிலமணிநேரத்தில் பயனுள்ள பல விஷயங்களை நான் அறிந்துகொள்ளமுடிந்தது. இத்துறையில் அவர் ஆழ்ந்த அறிவுள்ளவராகக் காணப்படுகிறார்."

இத்தகு தகமைகளால் உன்னத ஸ்தானம் வகிக்கும் பெரிய குருக்களின் அபிப்பிராயம், சிவஸ்ரீ அச்சுவேலிக் குருக்களவர்களுடையதற்கும் மற்றும் பெரியார்கள் எழுதியுள்ள குறிப்புக்கும் அமையவிருப்பதைச் சைவப்பெருமக்கள் அறிவது நன்று.

வேறும் இலங்கையில் உள்ள சாத்திர ஆகம அறிஞர்களும் தத்தம் ஆராய்ச்சியின்பயனாக நிட்சயித்தது மகாசிவராத்திரி தினம் 12-3-64-ல் என்பதே.

எமக்குத் தங்களது ஆராய்ச்சிமுடிவை அறிவித்தவர்களில் திருக்கோணமலை ஸ்ரீ பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள், மாவிட்டபுரம் ஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள், கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள், காரைநகர் ஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் ஆகியோரும் வேறு பலருமாவர்.

# சைப்ரஸில் புதிய பலாத்கார சம்பவங்கள்

## அமெரிக்க தூதராலயம் சேதமடைந்தது

நிக்கோஸியா, பெப். 5

**சைப்ரஸில் பலாத்கார சம்பவங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அங்கு இரு சமூகத்தினரும் தங்கள் அரசியல் வேறுபாடுகளை பேச்சுவார்த்தை மூலம் அமைதியாகத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி மக்காரியோஸ் வானொலி மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.**

அமைதியையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என அவர் கூறினர்

இதற்கிடையில் சைப்ரஸில் அமைதியைப் பாதுகாக்க ஒரு சர்வதேசப் படை நிறுவவேண்டுமென்ற ஆங்கிலோ-அமெரிக்க யோசனையை ஜனாதிபதி மக்காரியோஸ் கொள்கையளவில் ஏற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக அவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இத்தகைய படை பாதுகாப்பு சபை மூலமே அனுப்பப்படவேண்டும் என்றும், பாதுகாப்பு சபையே இதற்குப் பொறுப்பு வகிக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

நிக்கோஸியாவில் நேற்று இரு வெடிகுண்டுகள் வீசப்பட்டதால், அங்குள்ள அமெரிக்கத் தூதராலயம் சேதமடைந்தது. ஜனாதிபதி மக்காரியோஸ் ஸ்தலத்துக்கு விஜயம் செய்தார். இவ்வித நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினர்.

---

## "தீர்க்காயுள் பெறுவீராக"

மாஸ்கோ, பெப். 5

இந்திய-ரஷ்ய நேச உறவு சகல துறைகளிலும் அபிவிருத்தி அடையுமென நம்புவதாக சோவியத் பிரதமர் குருஷ்சேவ் நேருவுக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருக்கிறார். இரு நாடுகளின் நலன்களுக்கும், உலக சமாதானத்துக்கும் இது வழிசெய்யுமென்றும், சமாதானமாக உடனிருந்து வாழும் கொள்கை இதன் மூலம் பலமடையும் என்றும் குருஷ்சேவ் கூறியிருக்கிறார். திரு. நேருவுக்கு தீர்க்காயுளும், வெற்றியும் கிடைக்கவேண்டும் என்றும் அவர் வாழ்த்தியிருக்கிறார்.

## 'குருஷ்சேவுக்கு இணை இல்லை'

— நிக்ஸன்

மீஸன் ஹைமர் (வட கரோலினு), பெப். 5

"உலகத் தலைவர்களிடையே மிகத் திறமையான தலைவர் திரு. குருஷ்சேவ் என்பதில் சந்தேகமில்லை" என முன்னள் அமெரிக்க உப ஜனாதிபதி திரு. நிக்ஸன் கூறினர்.

திரு. குருஷ்சேவிடம் குறைகள் இருந்தபோதிலும், தமது கோபத்தை அடக்கிக்கொள்ளும் ஆற்றல் பெற்றவராய் இருக்கிறார் என்று பெய்பர் கல்லூரியில் பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மத்தியில் பேசும்போது திரு. நிக்ஸன் கூறினர்.

திரு. நிக்ஸன் 1900ம் ஆண்டு திரு. கென்னடியுடன் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர். எனினும் அடுத்த நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் அவர் குடியரசுக் கட்சி அபேட்சகராக நிறுத்தப்படும் சாத்தியம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

---

## "நிருத்யகலாரத்னம்" வைஜயந்திமாலா

பம்பாய், பெப். 5

சினிமா நடிகையான வைஜயந்திமாலாவுக்கு "நிருத்யகலாரத்தினம்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. பாரதிகலாமன்றம் என்ற ஸ்தாபனத்தின் சார்பில் மகாராஷ்டிர முதன் மந்திரி திரு. வி. பி. நாய்க் இப்பட்டத்தை வழங்கினர். பாரதி கலாமன்ற நூல்நிலையக் கட்டடநிதிக்காக வைஜயந்திமாலா நிகழ்த்திய பரதநாட்டிய நிகழ்ச்சியின் மூலம் ரூ. 86 ஆயிரம் வசூலாயிற்று. ஏற்கனவே இந்நிதிக்கு ஒரு லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

---

## ரூ. 60 கோடிக்கு ஆயுத உற்பத்தி

புதுடில்லி, பெப். 5

கடந்த ஆண்டு ரூபா 60 கோடி பெறுமதியுள்ள ஆயுதங்களை இந்தியா உற்பத்தி செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்தியாவில் உர்பத்தி செய்யப்பட்ட தானே இயங்கும் சுழல் துப்பாக்கிகள் முன்னேற்ற நாடுகளின் உற்பத்தித் தரத்தை ஒத்து இருப்பதாயும், கடற் பாதுகாப்பு பற்றி தீவிர கவனம் செலுத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## பாங்காக் மகாநாடு

பாங்காக், பெப். 5

மலேஷியா சம்பந்தமாக மூன்று வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாடு இன்று பாங்காக்கில் ஆரம்பமாகிறது. பிலிப்பைன்ஸ், மலேஷியா, இந்தோனேஷியப் பிரதிநிதிகள் இங்கு வந்து சேர்ந்தனர். மலேஷியப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சி செய்யப்படும் என பிலிப்பைன்ஸ் வெளிநாட்டுமந்திரி கூறினர். யுத்த நிறுத்தம், மாபிலிண்டோ திட்டம், மூன்று நாடுகளின் உயர் தலைவர்கள் சந்திப்பு ஆகியன பற்றி மகாநாடு ஆராயவிருப்பதாகவும் அவர் கூறினர்.

---

## கேரளம்பற்றி காமராஜர்

திருவனந்தபுரம், பெப். 5

கேரள விவகாரம் குறித்து காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்ட் ஆலோசனை நடத்துமென்றும், அதுவரை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருந்துவரும் என்றும் காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜர் திருவனந்தபுரத்தில் அறிவித்தார்.

---

## லண்டனில் வெலண்டினு

லண்டன், பெப். 5

ரஷ்ய விண்வெளி மங்கை வெலன்டினு டெரஸ்கோவா மூன்று நாள் பிரிட்டிஷ் விஜயத்தை மேற்கொண்டு நேற்று லண்டன் வந்து சேர்ந்தார். பிரிட்டிஷ் வான்வெளி தங்கப் பதக்கம் ஒன்று அவருக்கு வழங்கப்படவிருக்கிறது.

---

## எண்ணெய்

புதுடில்லி, பெப். 5

சென்னை உட்பட இரு இடங்களில் எண்ணெய் வடிசாலைகளை அமைக்க 8 நாடுகள் முன்வந்திருப்பதாயும், இது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாயும் அறிவிக்கப் படுகிறது.

---

## நேபாள பத்திரிகையாளர்

பங்களூர், பெப். 9

நேபாள பத்திரிகைத் தூது கோஷ்டி பம்பாயிலிருந்து நேற்று பங்களூர் வந்து சேர்ந்தது.

## ராதாகிருஷ்ணனுக்கு சத்திரசிகிச்சை

புதுடில்லி, பெப். 5

ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுக்கு கண்ணில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டிருப்பதாயும், சிலதினங்கள் அவர் ஓய்வு எடுத்துக்கொள்வார் என்றும் ராஷ்டிரபதி பவனத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது. தமது கடமைகளை அவர் தற்காலிகமாக, உப-ஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்னிடம் ஒப்படைத்திருப்பதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

# நடுநிலைமை தலைநகர்களில் இலங்கை-இந்திய பிரதிநிதிகள்

## மண்டலசார்பற்ற மகாநாடு பற்றி சுறுசுறுப்பு

கெய்ரோ, பெப். 5

இலங்கை வெளிநாட்டிலாகா காரியதரிசி திரு. ஜி. பீரிஸ், கெய்ரோவில் ஐக்கிய அராபியக் குடியரசு அதிகாரிகளுடன் மண்டலசார்பற்ற மகாநாட்டுக்குப் பூர்வாங்கமாக நடைபெறவிருக்கும் தூதர்கள் சந்திப்புபற்றிப் பேச்சு நடத்தினர். அதே சமயம் இந்திய உதவிவெளிநாட்டுமந்திரி திரு. தினேஷ் சிங் பெல்கிரேட்டில் ஜனாதிபதி டிட்டோவைச் சந்தித்து திரு. நேருவின் கடிதம்ஒன்றை அவரிடம் சமர்ப்பித்தார். யூகோஸ்லேவிய அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசினர். திரு. தினேஷ்சிங்குடன் நடத்திய பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாயும் உபயோகமானதாயிருந்ததாயும் யூகோஸ்லேவிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பாகிஸ்தானியருக்கு சீன இராணுவப்பயிற்சி

பீக்கிங், பெப். 5

சீன மொழி கற்பதற்காக பீக்கிங் சென்றிருக்கும் பாகிஸ்தானிய அதிகாரிகளுக்கு அங்கு ராணுவப்பயிற்சி அளிக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப் படுகிறது.

---

## இந்திய படத்துக்கு விசேஷ பரிசு

பேர்லின், பெப். 5

இந்தியத் தகவல் இலாகாவால் உற்பத்திசெய்யப்பட்ட விவசாயம் சம்பந்தமான சினிமாப்படம் பேர்லினில் விசேஷ பரிசு பெற்றிருக்கிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காட்டப்படுவதற்கு மிகவும் பொருத்தமான படமென இது வருணிக்கப்பட்டது.

---

# 30 ஆண்டு சிறைவாசம் செய்த கபார்கான்

## கொஞ்சக்காலம் ஓய்வு பெறுவார்

ராவல்பிண்டி, பெப். 5

மேற்கு பாகிஸ்தானில் பல்வேறு சிறைகளில் சிறைவைக்கப்பட்டிருந்து விடுதலையான கான் அப்துல்கபார்கான் கொஞ்சக்காலம் ஓய்வெடுத்துக் கொள்வார் என அவரது புதல்வர் கூறினர்.

கபார்கான், பாகிஸ்தான் ஏற்பட்டதிலிருந்து அநேகமாக இதுவரை சிறையிலேயே இருந்திருக்கிறார். செஞ்சட்டைப்படைத் தலைவரும், எல்லைக்காந்தி என அழைக்கப்படுபவருமான கபார்கானுக்கு வயது 74. பிரிவினைக்குமுன் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலும் பின்னர் பாகிஸ்தானிலும் அவர் மொத்தம் 30 ஆண்டுகளைச் சிறையில் கழித்திருக்கிறார்.

கடைசியாக 1961-ல் அவர் சிறை வைக்கப்பட்டார். இந்தச் சிறைவாசத்தின்போது அவர் சாப்பாட்டைத் தாமே சமைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவருடைய சமையல்காரர் சமைப்பதற்கு அதிகாரிகள் அனுமதியளிக்கவில்லை. 1948-ல் ஒருசமயம் சிறையில் அளிக்கப்பட்ட உணவில் விஷசத்துக்கள் இருந்ததால் அவர் ரொம்பவும் சிரமப்பட்டார். அதுமுதல் அவர் சிறையில் அளிக்கப்படும் உணவை மறுத்துவிட்டார்.

# "இந்தியாவுடன் இணைவதே காஷ்மீர் தலைவர்களின் அவா"

## திரு. சாஸ்திரி வெளியிடும் தகவல்

புதுடில்லி, பெப். 5

காஷ்மீரிலுள்ள அரசியல் கட்சிகள் காஷ்மீர் இந்தியாவுடன் பூரணமாக இணைவதையே விரும்புகின்றன என்று, ஸ்ரீநகரிலிருந்து திரும்பியபின் மத்தியமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி விடுத்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

புனிதச்சின்னம் மதத்தலைவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது குறித்து, பிரதமர் நேரு மகிழ்ச்சியடைந்திருப்பதாய் அவர் கூறினர்.

தாம் காஷ்மீர் பிரதமர் திரு. ஷம்சுதீனுடனும் இதர அரசியல் கட்சித் தலைவர்களுடனும் அரசியல் நிலைமைபற்றிப் பேச்சு நடத்தியதாயும் இந்தியாவுடன் பூரணமாக இணைய அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

"தங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஒருபுறமிருந்தாலும் ஒரு நல்ல பலமான அரசாங்கம் காஷ்மீரில் ஏற்பட வேண்டும் என்பதை அனைவரும் விரும்புகிறார்கள்" என்றும் சாஸ்திரி கூறினர்.

சமீபத்தில் காஷ்மீரில்கைது செய்யப்பட்ட 65 பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்று மந்திரி குறிப்பிட்டார்.

# அமெரிக்காவில் நீக்ரோ மாணவர் ஆர்ப்பாட்டம்

## நிறவெறியை எதிர்த்து

ஜேக்ஸன் (மிஸிஸிப்பி) பெப். 5

இங்கு ஆர்ப்பாட்டம் செய்த நீக்ரோ மாணவர்களைக் கலைக்க பொலிசார் தலைக்குமேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின், கண்ணீர்ப்புகையைப்பிரயோகித்தனர்.

ஒருகல்லூரி வளவுக்குள் 30 நிமிடம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிசார் இச்செயலில் ஈடுபட்டனர், வெள்ளையர் ஓட்டிச் சென்ற கார்ஒன்று, ஒருநீக்ரோ மாணவியை மோதி வீழ்த்தி அவளது காலில் முறிவு ஏற்படுத்தியதைத் தொடர்ந்து இரு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறறன.

பொலிசார் "ஜேக்ஸன் ஸ்டேட்" கல்லூரியை ஸீல் வைத்தனர். பத்திரிகை நிருபர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

காயங்களுக்காக மூன்று நீக்ரோக்கள் சிகிச்சையளிக்கப்பட்டதாக பொலிசார் அறிவித்தனர்.

அதேசமயம் நிறவெறியை எதிர்த்து 2,60,000 நியூயோர்க் நீக்ரோ மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர்.

நூற்றுக்கணக்கான பெற்றோர்களும், ஆசிரியர்களும், பிள்ளைகளும் நிறத்துவேஷத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு எழுதப்பட்ட சுலோக அட்டைகளுடன் பாடசாலைகளுக்கு வெளியே அணிவகுத்துச் சென்றனர்.

நகரிலுள்ள 860 பாடசாலை மாணவர்களில் பாதிபேர் ஒருநாள் பகிஷ்காரத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்குச் செல்லவில்லையெனக் கூறப்பட்டது. அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்க 2000 பொலிசார் விசேஷக் கடமைகளுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். மேலும் 6000பொலிசார் ரிஸர்வில் வைக்கப்பட்டிருந்தனர்.

## வயது 70: 2மைல் ஓடினர்!

### வினோபாஜீ சாதனை

பிலாஸ்பூர், பெப். 5

பூதான இயக்கத் தலைவர் வினோபாஜி, குறித்த நேரத்தில் பிலாஸ்பூர் நகரை அடைவதற்காக 2 மைல் ஓடினர். காலந்தவறாமல் செயல்புரிவதற்கு அவர் சிறந்த உதாரணம் காட்டினர்.

70 வயதுடைய வினோபா, கிராமப்புறத்தில் பாதயாத்திரை செய்து கொண்டிருந்தார். அப்போது பிலாஸ்பூர் நகரை நோக்கி நடந்து கொண்டிருந்தார். 8 மைல்கள் சென்றதும் நகரை அடைவதற்கு மேலும் 2 மைல்கள் இருப்பதாகக் கூறப்பட்டது. முதலில் அந்த நகரத்திற்கு மொத்தம் 8 மைல்கள் இருப்பதாகவே கூறப்பட்டிருந்தது. ஆகவே குறித்த நேரத்தில் போய்ச் சேருவதற்காக அவர் 2 மைல் தூரமும் ஓடினர். நகரின் எல்லைப்புறத்தில் ஏராளமான மக்கள் அவரை வரவேற்றார்கள். குறித்த நேரத்தில் அவர் வந்து சேர்ந்தது குறித்து அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

---

## ராஜமாதாவுக்கு சத்திரசிகிச்சை

லண்டன், பெப். 5

ராஜமாதா எலிஸபெத் (மகாராணியின் தாயார்) வயிற்றுவலி காரணமாக ஆபரேஷன் செய்யும்பொருட்டு லண்டன் ஆஸபத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். கனடா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அவர் மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

# 'சுதந்திரதினம் கொண்டாடுவது வெறும் கேலிக்கூத்து'

## அநுராதபுர வரியிறுப்பாளர் சங்கம் கருத்து

அநுராதபுரம், புதன்

'இப்போதுள்ள சூழ்நிலையில் எமது நாட்டில் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை நடத்துவது வெறும் கேலிக்கூத்தாக இருக்கும்' என அநுராதபுரம் வரி இறுப்பாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்களும், மந்திரிகளும், எம். பி.க்களும் சுதந்திரதினக்கொண்டாட்டத்தைப்பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் வகையில் மேற்படி சங்கத்தினால் நடத்தப்பட்ட இயக்கத்தின் ஓர் அம்சமாகவே இத் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

இத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

அரசியல் சுதந்திரத்துடன் மட்டும் நமது சுதந்திரம் நின்றுவிடுவதா?

எமது பொருளாதார, மத, மொழி விடுதலையைப் பெற்ற பின் நாம் சுதந்திரதினத்தைக்கொண்டாடுவோம்.

வெளி உலகத்துக்கு இலங்கை தனது சுதந்திரம் பற்றிப் பெரிதாகக் கூறிவருகிறது. ஆனால் இங்குள்ள மக்கள் வரிச்சுமையாலும், வாழ்க்கைச் செலவு உயர்வாலும் மிக கஷ்டப்படுகிறார்கள்.

ஒரு ரூபா நோட்டின் பெறுமதி 25 சதத்துக்குக்குறைந்த போது எமக்கு என்ன பொருளாதார விடுதலை இருக்கிறது.

சிங்களத்தில் நிர்வாகம் என்றுபெருமையாகக் கூறப்பட்ட போதும் ஆங்கிலத்திலேயே அலுவல்கள் நடைபெறுகின்றன. மொழியைப் பொறுத்தவரை நாம் எந்த சுதந்திரத்தை அனுபவிக்கின்றோம்!

---

## பிராமணர்கள்சங்க மகாசபைக் கூட்டம்

சுன்னாகம், புதன்

அகில இலங்கை சிவப்பிராமணசங்க ஆதரவில் சுன்னாகம் ஸ்ரீ சதாசிவ பிராசீனவேதாகம பாடசாலையில் அண்மையில் ஒரு விசேஷ மகாசபை கூடிற்று. கூட்டத்திற்குச் சிவஸ்ரீ சீ. கார்த்திகேயஐயர் தலைமை வகித்தார். பாடசாலையில் இன்னும் கூடுதலாகப் பிராமணப் பிள்ளைகளைச் சேர்த்து சைவக் கிரியைகள், கோயில் பூசைமுதலியவற்றில் கூடிய சிரத்தை காட்டிக் கற்பித்து சான்றுப் பத்திரம் வழங்க வேண்டுமென்றும் இன்னும் அபிவிருத்திக்கான முறையில் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்றும் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள் சபையோரைக் கேட்டுக் கொண்டார்.

ஈற்றில் கௌரவ உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் சிவஸ்ரீ சீ. கார்த்திகேயஐயர், உபதலைவர்: சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசாமிஐயர், காரியதரிசி: சிவஸ்ரீ வி. சிற்சபேசஐயர், தனாதிகாரி: சிவஸ்ரீ ச. தியாகராசசிவஐயர், கணக்குப்பரிசோதகர்: சிவஸ்ரீ வா. முத்துக்குமாரசாமிஐயர். 16 பேர் அமைந்த நிர்வாக உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் நன்றி கூறி எல்லோருடைய ஒத்துழைப்புடன் மேற்படி பாடசாலையை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரச்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

---

## விஞ்ஞானிகள் சந்திப்பு

புதுடில்லி, பெப் 5

பிரதமமந்திரி நேருவை நேற்று அமெரிக்க, பிரிட்டிஷ், ருஷ்ய விஞ்ஞானிகள் சந்தித்துப் பேசினர்.

## பாராட்டுவிழா

கொடிகாமம், புதன்

உசன் மகா வித்தியாலயத்தில் 32 ஆண்டுகள் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து இளைப்பாறிய திரு. மு. சி. சிற்றம்பலத்திற்கு, பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் இம்மாதம் 8-ம் திகதி சனிக்கிழமை ஒரு சேவை நலம் பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது.

வழக்கறிஞர் திரு. ச. இராசரத்தினம் தலைமையில், உசன் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இராமநாதன் அரங்கில் நடைபெறவிருக்கும் இப்பாராட்டு விழாவில், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், முன்னாள் உதவி வித்தியாபதி திரு. கே. எஸ். அருள்நந்தி, காரியாதிகாரிகள் திரு. சிவஞானம், திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, அதிபர் திரு. எம். சத்தியமூர்த்தி ஆகியோர் பேசுவார்கள்.

### பாராட்டுவிழா

பரந்தன், புதன்

கலவெட்டித்திடல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சென்ற 12 ஆண்டுகளாக ஆங்கில ஆசிரியராகவும் 5 மாதங்கள் பதில் தலைமையாசிரியராகவும் கடமையாற்றியபின், பூநகரி அத்தாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகி சென்ற திரு. மு. கா. கணபதிபிள்ளைக்கு, கலவெட்டித்திடல் மாதர் முன்னேற்ற சங்கத்தினர் சேவைநலம் பாராட்டுவிழா ஒன்றை நடத்தினார்கள்.

---

## வான்காலை நிறுவப்படும்

கொடிகாமம், புதன்

கொடிகாமம் சந்தைக்கு வரும் தனிப்பட்ட வாகனங்களால் பொதுமக்களுக்கு மிகுந்த கஷ்டங்களும் விபத்துக்களும் ஏற்படுவதால், சந்தியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள் தனிப்பட்ட வான்களை அனுமதிப்பதில்லை என்றும், வான்களுக்கென்று வான்காலை ஒன்றை ஏற்படுத்துவதென்றும் கச்சாய் கிராமசபை தீர்மானித்துள்ளது.

வான்காலை இல்லாத காரணத்தால் தனிபட்ட வான் சொந்தக்காரர்களிடமிருந்து வாடகைப்பணம் அறவிட முடியாமலிருப்பதாகவும், இதனால் வாடகைப்பணம் தரமறுக்கும் வான் சொந்தக்காரர்கள் மீது வழக்கு தொடர முடியாமல் இருப்பதால் கூடிய விரைவில் ஒரு வான் காலையை நிறுவ ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

---

## கட்டடத்தின் இக்கட்டம்

கச்சாய், புதன்

பொதுமக்களின் வசதிக்காக இம்மாதம் 10- திகதி கொடிகாமம் சந்தைக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டிய கட்டிடத்திற்கு இன்னும் அத்திவாரம் கூட போடப்படவில்லை. இதனால் பொதுமக்கள் கடும் வெளியிலில் இருந்து வியாபாரம் செய்து வருகிறார்கள்.

இதுசம்பந்தமாக ஒப்பந்தகாரரை விசாரித்தபோது அக்கட்டிடத்திற்கான மாதிரிப் படம் இன்னும் தமக்குத் தரப்படவில்லையென்றும், அதனால் தான் தாமதம் ஏற்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

கூடிய விரைவில் இக்கட்டிடத்தை கட்டி முடிக்க ஒழுங்குகள் செய்யும்படி கச்சாய் கிராமசபைத் தலைவரை பொதுமக்களில் பலர் கேட்டுள்ளார்கள்.

## ஆசிரியருக்கு பிரியாவிடை

யாழ்ப்பாணம், புதன்

பெருமாள் கோவிலடி ஆங்கில வித்தியாசாலையிலிருந்து உயரப்புலம் அரசினர் பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்ற ஆசிரியர் திரு. டி. எஸ. கனகரத்தினத்தின் சேவைநலம் பாராட்டி ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து ஒரு பிரிவுபசாரம் நடத்தினார்கள்.

திரு. எஸ். விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு தலைமை ஆசிரியர் திரு. ஜே. எஸ். அழகரத்தினம், திரு. எஸ். பரமசாமி ஆகியோர் சேவை நலம் பாராட்டிப் பேசினர்.

---

## பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கேரளா விஜயம்

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை ரோட்டரிக் கிளப்பின் தலைவரும், பருத்தித்துறை மாஜிஸ்திரேட்டுமான திரு ஏ. வைத்திலிங்கம் இம்மாதம் கேரளத்துக்குச்செல்லவிருக்கிறார்.

கேரள ரோட்டரிக்கிளப்பின் விசேஷ அழைப்பின்பேரிலேயே திரு. வைத்திலிங்கம் அங்கு செல்கிறார். இம் மாதம் 21-ம் திகதியிலிருந்து 23-ம் திகதிவரை அங்கு தங்கியிருக்கையில், அங்கு நடைபெறும் மகா நாட்டில் 'தொருற்கல்வி' என்னும் விஜயம் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

---

## வள்ளுவர் விழா

உடுப்பிட்டி, புதன்

"இன்று எமது தமிழ்மொழி இருக்கும் நிலையில் நாம் இப்பேர்ப்பட்ட விழாக்கள் நடாத்துவதன் மூலம் எமது தமிழுணர்வைத் தட்டியெழுப்ப முடியும். எனவே காலங்கடந்த-சாதிமத பாகுபாடற்ற உத்தம நூலாம் தென்னுதமிழ் குறளை ஆக்கிய வள்ளுவனுக்கு விழா வெடுத்தமைக்காக கரவை வள்ளுவர் மன்றத்தினரை நான் மிகவும் பாராட்டுகிறேன்."

மேல்கரவை வள்ளுவர்மன்றத்தினரால்கரவெட்டிவிக்னேஸ்வராக் கல்லூரியில் நடாத்தப்பட்ட வள்ளுவர் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் உடுப்பிட்டி எம். பி., மு சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

செல்வன் . நவரத்தினத்தின் வாழ்த்துப்பாவில் பின்னர் சுப. இளங்கீரன் பேசுகையில், "நம் நாட்டு மக்களுக்கு கூத்துக்களும் நாடகங்களும் நடாத்து இன்புறத்தெரியுமேயன்றி தென்னுதமிழ்ப்பாவலர்களைப் பாராட்டி விழாவெடுக்கத் தெரிவதில்லை யென்றும், இளைஞர்களுக்காவது அவற்றைச் செய்யப் போதிய ஊக்கம் கொடுப்பதில்லையென்றும் கூறி கரவை வள்ளுவர் மன்றத்தின் இம்முயற்சி பெருமைக்குரிய தொன்றாகும் என்று குறிப்பிட்டார்.

பண்டிதர் முருகேசு பேசுகையில், "ஓர் சிங்களப் பெண்மணி திருக்குறளின் பெருமையை உணர்ந்து அதனைச் சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளார் என்றால் இதைவிட வேறென்ன பெருமை வேண்டும் திருக்குறளுக்கு" என்று வினவினார்.

திரு. அருள்நந்தி, திரு. செ. பாலசுப்பிரமணியம், திரு. மு. கணபதிப்பிள்ளை ஆகியோர் குறளின் சிறப்பைப் பற்றி பேசினார்கள்.

---

## கும்பாபிஷேகம்

கந்தரோடை, புதன்

கடந்த திங்கட்கிழமை உடுவில் மல்வம் முருகமூர்த்தி ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 15 தினங்களுக்கு அபிஷேக ஆராதனை நடைபெறவிருக்கின்றன.

# மாணவரின் தாய்மொழியில் அறிமுக அட்டை வழங்க கோரிக்கை

## பெற்றோர் சங்கத்தின் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிமுக அட்டைகளில் அடங்கியுள்ள சகல விபரங்களும் அவர்களுக்கு விளங்காத சிங்கள மொழியில் எழுதப்பட்டிருக்கும்போது மாணவர்களை அதை அத்தாட்சிப்படுத்தி கையெழுத்திடுமாறு நிர்ப்பந்திப்பது அநீதியானதென்றும், அடிப்படை உரிமைக்கு முரண்பட்டதாக உள்ளதாகவும் அண்மையில் நடந்த யாழ்ப்பாணம் பெற்றோர் சங்கக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பெற்றோர் சங்கக் கூட்டத்தில் இது குறித்தும், வேறு பொதுவானதுமான நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு:-

ஒரு சாசனத்தை அத்தாட்சிப் படுத்துபவர் அதில் கூறப்பட்டிருக்கும் விபரங்களுக்கு பாத்திரவாளி என்று நிர்ணயிக்கும் இந்நாட்டுச் சட்டத்தையே, மாணவருக்கு தெரியாத மொழியில் விபரங்களை எழுதிவைத்து, கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டுமெனக் கூறுவது பாதிக்கிறது. ஒரு பத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விபரங்களை அறிந்து அத்தாட்சிப் படுத்தும் உரிமையும் இதனால் பறிக்கப்படுகிறது,

தமிழ் மாணவர்கள் வேறு விபரங்கள் அடங்கிய அதாவது தங்கள் சொந்த விபரங் இல்லாத அறிமுக அட்டைகளில் கையெழுத்திட்டு வருகிறார்கள் என்பதை' அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

உள் நாட்டுக் கருமங்கள் நாட்டு மக்களின் நலன் கருதியும், வசதி குறித்து மே தேசிய மொழிகளில் செய்யப்படுவது வழக்கம். ஆனால் இங்கோ சிங்களம் அறியாத லட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்களுடன் அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் தொடர்பு கொள்ளுகிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு தமிழ் தெரியாது என்ற காரணத்துக்காக லட்சக்கணக்கான தமிழ்மக்களுடன் சிங்களத்தில் தொடர்பு கொள்வது அநீதியானதாகும்.

தமிழ் பேசும் மாணவர்கள் தமது தாய் மொழியாகிய தமிழிலேயே கல்வி பயில்வதற்கு உரிமையுடையவர்கள் என்று வழிவிட்டு வந்த அரசாங்கம் திடீரென சிங்கள சாசனங்களை அத்தாட்சிப்படுத்தநிர்ப்பந்திப்பது விந்தையாகவே உள்ளது.

தனிப்பட்டவர்களின் அறிமுக அட்டைகளை அவரவரின் தாய் மொழியிலேயே விபரங்களைக் குறித்து விநியோகிக்கச்செய்யுமாறு அரசாங்கத்தையும், விசேஷமாக தபால் இலாகா அதிபரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

---

## நகரசபையில் அமளி

பலாங்கொடை, புதன்

அண்மையில் நடைபெற்ற பலாங்கொடை நகரசபைக் கூட்டத்தில் பெரும் அமளி துமளிகள் நடைபெற்றன. இரு அங்கத்தவர்களின் வாக்கு வாதம் பலத்து அவர்கள் கதிரைகளைஒருவர் மேல்ஒருவர் வீசுமளவிற்கு வளர்ந்தபோது தலைவரும் மற்றும் அங்கத்தவர்களும் தலையிட்டு நிலைமையைச் சீராக்கினர்.


முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!




'ப்ளெக் ப்ளேக்'

பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினி யாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்களை, நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்டபின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.

STR-BF/-A-T-3

# தமிழ்ப் பகுதிகளில் துக்கதினம் அனுஷ்டிப்பு

## பல இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4-ம் திகதியன்று தமிழ்ப் பகுதிகளில் அமைதியான முறையில் துக்கதினமாக அனுஷ்டிக்கப் பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டன. ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

### வவனியாவில்

சுதந்திர தினத்தன்று இங்கு பகிரங்க பொதுக் கூட்டமொன்று தமிழரசு வாலிப முன்னணியினரால் நடத்தப்பட்டது.

தமிழரசு வாலிப முன்னணி வவனியா கிளைத்தலைவர் திரு. செ. ஞானசேகரம் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:

சிங்களச் சகோதரர் தங்கள் பிரதேசங்களில் இத்தினத்தை ஓர் நன்னாளாகக் கொண்டாடுகின்றார்கள் ஆனால் அதே நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்கள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இது மிக்க மனவேதனையைத் தருவதாக இருக்கின்றது.

இந்த நிலைமையை மாற்ற ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அறப்போரில் இறங்க வேண்டும்.

தனிச்சிங்களத் திணிப்பை எதிர்க்க தமிழர் எல்லோரும் முயற்சிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் இந்த அரசாங்கத்தினால் செய்யப்படும் அநீதிகள் ஏராளம் என்றும் எந்தகட்சியினரோ தமிழரின் உரிமைக்கான போராட்டத்தில் இறங்கினால் தாம் தமது பூரண ஆதரவைத் தரவும் தயார் என்றும் கூறினார்.

தமிழரசு வாலிப முன்னணி காரியதரிசி திரு சி. சுப்பிரமணியமும் வேறு சிலரும் பேசினர்.

சுதந்திரத்தினக் கொண்டாட்டத்தில் பங்கு கொள்ளவில்லை என்பதையும் துக்கத் தினத்தைக் காட்டும் பொருட்டும் வவனியா பகுதியிலுள்ள சில கடைகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இங்குள்ள கடைகள் திறக்கப்பட்டிருந்தன.

### திருக்கோணமலை

திருக்கோணமலையில் துக்க தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் பல இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

சுதந்திர தினத்தையொட்டி கந்தளாயிலிருந்து திருக்கோணமலைக்கு நடைபெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் தமிழர்கள் கலந்து கொள்ளவில்லை.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு பட்டின சபை எல்லைக் குட்பட்ட சகல வியாபார ஸ்தாபனங்களும் துக்க தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் பூட்டப்பட்டிருந்தன. பல கடைகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அரசாங்க கேளிக்கைகளோ விளையாட்டு வைபவங்களோ எதுவும் இடம்பெறவில்லை. பட்டணத்தில் சனநடமாட்டம் குறைந்து வெறிச்சென்று இருந்தது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு நகரசபைச் கட்டடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. இங்கு பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

### அக்கரைப்பற்று

இங்கும் பல இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பட்டிருப்பு எம். பி யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் அநீதியான முறையில் தமிழ் மக்கள் நடத்தப்படும் இவ்வேளையில் சுதந்திர தினத்தை கொண்டாடுவது அர்த்தமற்றதென்றும் இத்தினமே தமிழினை மேலும் அடிமைசளாக்கியது என்றும் குறிப்பிட்டார்.

### மன்னார்

மன்னார் பகுதியில் துக்க தினத்தை அனுஷ்டிக்கு முகமாக பல இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பட்டணம் வழமையான சோபையற்றிருந்தது.

### சுன்னாகத்தில்

சுன்னாகத்தில் பல கடைகளில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. தேனீர்க் கடைகளைத் தவிர்த்து ஏனைய வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டும் அரைக்கதவில் திறந்தும் காணப்பட்டன.

வலிகாமம் வடக்கு ஐக்கிய பண்டகசாலை, சுன்னாகம் ஐக்கிய பண்டகசாலை, சுன்னாகம் பலநோக்கக் கூட்டுறவு விவசாயிகள் சங்கம் ஆகியன தங்கள் ஸ்தாபனங்களை மூடியிருந்தனர். சுன்னாகம் கூட்டுறவு பாண்பேக்கரி மட்டும் வழமைபோல் திறக்கப்பட்டிருந்தது.

### தெல்லிப்பழையில்

தெல்லிப்பழையிலுள்ள தமிழரசுக் கட்சிக் காரியாலயத்திலும் பல கடைகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சில வீடுகளிலும் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன. கடைகளெல்லாம் பூட்டப்பட்டிருந்தன. இரவு தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் இறை வணக்கம் இடம்பெற்றது.

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி கட்டுவன் முதலிய இடங்களிலும் கடைகள் பூட்டப்பட்டு அமைதியான முறையில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

### வல்வெட்டித்துறையில்

வல்வெட்டித்துறையில் வழமைபோல் கடைகள் யாவும் திறக்கப்பட்டிருந்தன. இன்பருட்டி சனசமூக நிலையத்தில் கறுத்தக்கொடியும், தமிரசுக் கொடியும் பறக்க விடப்பட்டிருந்தன.

### தீவுப்பகுதியில்

ஊர்காவற்றுறையில் பட்டினப்பகுதியில் பிரதான இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

புங்குடு தீவு, வேலணை ஆகிய இடங்களில் கடைகள் மூடப்பட்டிருந்தன.

### ஆவரங்காலில்

இப்பகுதியில் கடைகள்யாவும் திறந்துவைக்கப்பட்டிருந்தன. பல கடைகளில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஆவரங்கால் கிராம முன்னேற்றச்சங்கக் கட்டடத்தில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டது. ஆவரங்காலிலுள்ள சனசமூக நிலையத்திலும் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டது.

புத்தூர் பகுதி தமிழரசுக் கிளையும் ஆவரங்கால் கிராம முன்னேற்ற சங்கமும் கூட்டாக துக்க தினத்தைக்கொண்டாடியது.

### சாவகச்சேரி

சாவகச்சேரியில் பிரதான சந்திகளிலும் வர்த்தக ஸதாபனங்களிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. வர்த்தக ஸ்தாபனங்கள் வழமைபோல கடைகளைத் திறந்து வியாபாரஞ் செய்தன.

தமிழினத்தின் நன்மை கருதி கோவில்களில் விசேஷ பூசை ஆராதனைகள் இடம்பெற்றன.

### கொடிகாமம்

சுதந்திர தினத்தன்று இங்குள்ள கடைகள் எல்லாம் பூட்டி கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப் பட்டது. வீதிகளில் வாகனப்போக்குவரத்தும் பொது சனநடமாட்டமும்குறைவாகக் காணப்பட்டது.

மத்தியானம், கறுப்புக் கொடிகள் தாங்கியவண்ணம் ஒரு சைக்கிள் ஊர்வலம் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கடைச் சொந்தக்காரர்களிடம் நேரடியாகச் சென்று கடைகளைப் பூட்டும்படி கேட்டுக்கொள்ளாமலிருந்தும் கூட, கடைச் சொந்தக்காரர்கள் எல்லோரும் கடைகளை பூட்டியிருந்தார்கள். இங்குள்ள ஒரே ஒரு பேக்கரி கூட பூட்டியிருந்தது.

# தற்கொலைகள் மூன்று

## (1)

ஊர்காவற்றுறை, புதன்

மேல்படிப்புக்கு வசதியற்ற சூழ்நிலையில் மனமுடைந்த மாணவி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவம் புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தில் நேற்று முன் தினம் நிகழ்ந்தது.

நல்லதம்பியின் மகளான தவமணிதேவி (வயது 20) என்னும் மாணவியே தற்கொலையுண்ட மாணவியாவர்.

பல ஆண்டுகளுக்கு முன் தந்தையை இழந்த இந்த மாணவி தனது முயற்சியினால் எச். எஸ். ஸி. வரை படித்தவர் என்றும், துரதிர்ஷ்டவசமாக பரீட்சையில் இரண்டு தடவை சித்தியடையத் தவறி விட்டமையால் சமீபகாலமாக மிகமனமுடைந்து காணப்பட்டார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. மீண்டும் சோதனையை எடுப்பதற்கு குடும்பத்தின் கஷ்டமான நிலை இடம் கொடுக்காமல் இருந்தமையால் மனவருத்தம் உடையவராய் இருந்தார் என்றும் சாட்சியமளித்த மாணவியின் தாயார் விசாரணையின்போது கூறினார்.

புங்குடுதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. முருகேசு, நீண்ட விசாரணையின பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## (2)

புங்குடுதீவு பதினோராம் வட்டாரத்தைச் சேர்ந்த மருதப்புவின் மகன் நடராசா (வயது 28) என்பவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மரணவிசாரணையின் போது தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## (3)

புங்குடுதீவு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையாவின் மகள் சின்னம்மா (வயது 17) கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

பிரஸ்தாப யுவதி சின்னம்மா ஒருவரைக் காதலித்து வந்தார் என்றும், காதலர் வேறு ஒரு பெண்ணை மணம் முடிக்கத் தீர்மானித்ததன் மேல் மிகமனமுடைந்து இருந்தார் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. முருகேசு விசாரணை நடத்தினர். விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

# வானொலிநிகழ்ச்சிகள்

## வியாழன் 6-2-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-10 விவசாயிகள், 6-15 பாங்கு.

இரவு 6-30 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-00 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம் — கே. பி. ராஜமாணிக்கம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை,7-30 துதிப்பாடல்கள் — என். வி. கருணாலய பாகவதர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு. 2-40 ஜயபேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப் பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பூகோள சூழ்நிலையும் மனிதவாழ்வும், 7-45 ராகம், தானம், பல்லவி — ஜி. என். பாலசுப்பிரமணியம் — பாட்டு, 8-40 குரல் இசை, 9-15 வீரபாரதம் — இசைச்சித்திரம், 9-30 சாத்தனூர் டி. எஸ். சங்கரன் — புல்லாங்குழல்.

# தேவையான . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குமதி செய்யப்பட்டதாகவும், இறக்குமதிசெய்யப்பட்ட 174,222 தொன் வெள்ளைச்சீனியில் போலந்திலிருந்தே அதிக சீனி வாங்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

1962-ம் ஆண்டு 643,610,000 ரூபா உணவு மான்யமாக வழங்கப்பட்டதாகவும் இதில் அரிசி, மாவு, சீனி ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மட்டும் 339,454,687 ரூபா பெறுமதிக்கு இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டில் நாட்டின் சனத்தொகை 10,168,000 ஆக இருந்தபொழுதிலும் 8,873,125 பேருக்கு வேண்டிய 823,933 தொன் அரிசியே கூப்பன் அரிசியாக வழங்கப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

# பொலிஸாரால் அணைக்கப்பட்டது

குருநாகலை, புதன்

குருநாகலைக் கச்சேரிக்கு அருகாமையிலுள்ள பெரிய மரமொன்று நேற்று நள்ளிரவு திடீரென தீப்பிடித்து அருகிலுள்ள கச்சேரியிலுள்ள பதிவு காரியஸ்தரின் அலுவலகத்துக்கு பரவும் சமயத்தில் பொலிசாரின் முயற்சியால் அணைக்கப்பட்டது.

# கஞ்சா விற்றதாக இருமுறைகுற்றச்சாட்டு

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி பெண் அழகம்மா என்பவர் மீது கஞ்சா விற்றதாக குற்றம் சாட்டப்பட்டுதொடரப்பட்ட இருவழக்குகளில்நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் எதிரிக்குத்தனித்தனிஒவ்வோர் வழக்கிலும் ரூபா 100 அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கினர்.


## வரி விளம்பரம்

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் [illegible]மார், அரசியற் பிரமுகர் [illegible] சிகிச்சை பெற்ற [illegible] அடங்கிய கற்ற [illegible] இனும். தொய்வுக்கு [illegible] மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரண[illegible] கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### மனேச்சர் தேவை

உடுத்துறை ஆழியவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. பிணைப்பணம் ரொக்கம் 1250/-ரூபா. சம்பளம் 100/-ரூபா, சம்பள உயர்வு உண்டு. மற்றும் வேண்டிய விபரத்திற்கு மனுச்செய்யவும்.

A. K. Ehamparam, Secretary,
M. P. C S. LTD, Uduthurai,
Chempianpattu.

1782


# சோவியத் நிபுணர் அறிக்கை சமர்ப்பித்தனர்

கொழும்பு, புதன்

இலங்கையில்வந்து ஆராய்ச்சி நடத்திய வீடமைப்பு நிபுணர்கள் தங்கள் இறுதியான அறிக்கையை வீடமைப்பு மந்திரி திரு. பதியுதீன் மாமூத்திடம் சமர்ப்பித்துள்ளனர். கொங்கிறீட் கல்போன்றகட்டட அமைப்புச்சாமான்களை தயாரித்து விநியோகிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கும், அதற்கு வேண்டிய இயந்திர தளபாடங்களை கொடுத்துதவும், 750 வீடுகள் கொண்ட ஒரு கட்டிடத்தை அமைத்துக் கொடுக்கவும் அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# கல்வி அதிகாரியை எம். பி.க்கள் சந்தித்தனர்

நல்லூர், வியாழன்

கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஆகியோர் நேற்று வடபகுதிக் கல்வி அதிகாரியைச் சந்தித்து வடபகுதி கல்விநிலை பற்றி எடுத்துரைத்தனர்.

திரு. எஸ். தணிகாசலம், மூன்று எம். பி.க்களினதும் அபிப்பிராயங்களைக் கேட்டதுடன் அவர்களது சில ஆலோசனைகள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினர்.

# முல்லைத்தீவில்தமிழில் வாக்கு மூலம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலங்கள் தமிழ்மொழியில் பதிவு செய்யப்படுவதில்லை யென்று வவனியா எம். பி சிவசிதம்பரத்திற்கும் பொலிஸ் மேலிடத்துக்கும் பொது மக்கள்செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இம்மாதம் 1-ம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

தற்பொழுது முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டரைத் தவிர மற்ற எல்லோரும் சிங்கள உத்தியோகத்தர்களென்றும், புதிதாக அனுப்பப்பட்டுள்ள தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் பொது மக்களின் வாக்குமூலங்களை தமிழில் பதிய உதவி செய்வாரென்றும் தெரியவருகிறது.

# தேவையான அரிசியில் பாதிக்குமேல் இறக்குமதி

## உணவுக்கமிஷனர் வருடாந்த அறிக்கை வெளியிடும் தகவல்

கொழும்பு, புதன்

1961—62 வரையான நிதியாண்டில் 368,845 தொன் அரிசி உள்நாட்டிலிருந்து வாங்கப்பட்டதாகவும், முன்னைய வருடத்தைவிட 30,485 தொன்களால் இது அதிகரித்துள்ளதாகவும் சென்ற திங்கட்கிழமை வெளியிடப்பட்ட உணவுக் கமிஷனரின் 1961-62-ம் நிதி ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நிதியாண்டில் வெளிநாட்டிலிருந்து 462,892 தொன் அரிசியே இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது. குறிப்பிட்ட நிதியாண்டில் நாட்டுக்குத் தேவையான அரிசியில் 44.4 சதவிகிதம் உள்நாட்டில் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பது இதன்மூலம் தெரியவருகிறது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் சுமார் 80 சதவிகிதம் பர்மாவிடமிருந்தே வாங்கப்பட்டுள்ளதென்பதை அறிக்கைமூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. இறக்குமதி செய்யப்பட்ட மாவில் (204,883 தொன்) சுமார் 65 சதவிகிதம் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டுள்ளதாகவும், கறுப்புச் சீனி இறக்குமதியில் 11,000 தொன் கியுபாவிலிருந்து இறக்

(5-ம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில்கள் பாதிக்கப்படலாம்

கொழும்பு, புதன்

சென்ற நான்கு மாத காலங்களில் வெளிநாட்டு மூலதனத்தில் 1530 லட்சம் ரூபா வீழ்ச்சியடைந்துள்ளதால் புதிய கைத்தொழில்கள் பாதிக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

400 புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய வெளிநாட்டு மூலதன வீழ்ச்சியின் காரணமாக இப்புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதை அங்கீகாரம் செய்வது ஒத்திவைக்கப்படலாம் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டால் இயந்திரங்கள், மூலப்பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதின் மூலம் வெளிநாட்டு மூலதனத்தில் மேலும் வீழ்ச்சியடையும் என்பதே அங்கீகாரம் ஒத்திவைக்க இருப்பதற்கான காரணம் எனத் தெரியவருகிறது.

## வீதிகளைத் திருத்த நிதி ஒதுக்கப்படும்

கொழும்பு, புதன்

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள வீதிகள் சீர்கெட்டுள்ளதால் அவற்றைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்குமாறு தபால் மராமத்து மந்திரி திரு எம். பி. டி' சட சிறிவர்த்தன அரசாங்கத்திடம் மகஜர் சமர்ப்பித்திருந்தார். இந்த மகஜரைப் பரிசீலனை செய்த அரசாங்கம் வீதிகத் திருத்துவதற்கென 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.


இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ரி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

மதுரமான திசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.

கண்டுகளிக்கத் தவறாதீர்கள்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# காலி சுதந்திரதின விழாவில் நாதஸ்வரக் கச்சேரி

காலி, புதன்

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றிரவு காலி திறந்த வெளி அரங்கில் பல கலாசார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அங்கு இடம்பெற்ற 21 நிகழ்ச்சிகளில் நாதஸ்வரம், கதகளி நாட்டியம், களிகம்பு நடனம் ஆகியன இடம்பெற்றன. பி. கந்தசாமி கோஷ்டியார் நாதஸ்வரம் வாசித்தனர். கொக்குவில் நடனக் கல்லூரியைச் சேர்ந்த டி. சுப்பையா கோஷ்டியார் கதகளி நடனம் ஆடினர்.

காலியின் சரித்திரத்தில் முதல்தடவையாக இரு இளம் பெண்கள் கதகளி நடனத்தில் பங்கெடுத்துக்கொண்டு பலரது பாராட்டுக்களைப் பெற்றனர். 5 பேர் நடத்திய வாண வேடிக்கைக் காட்சிகளுடன் சுதந்திர தின நிகழ்ச்சிகள் காலியில் முடிவடைந்தன. நேற்று நள்ளிரவுகூடத் திரளான மக்கள் கொண்டாட்டத்தில் பங்குபற்றினர்.

## ஸகிர்ஹூஸெய்ன் பிரமாணம்

புதுடில்லி, பெப். 5

இன்று முதல் இந்திய ஜனாதிபதியின் கடமைகளை ஏற்கும் உபஜனாதிபதி டாக்டர் ஸகிர்ஹூஸெய்னுக்கு தலைமை நீதிபதி திரு. கஜேந்திரகட்கர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். கண்ணில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், சிறிது நாட்கள் படுக்கையிலிருக்க வேண்டியிருப்பதால், அவரது கடமைகளை உபஜனாதிபதி ஏற்கிறார்.

## 'காந்தி வழியைப் பின்பற்றுவோம்'

### சாவகச்சேரி எம். பி. வேண்டுகோள்

சாவகச்சேரி, புதன்

"ஓர் இனத்தின் விடுதலையோ அல்லது ஒரு நாட்டின் விடுதலையோ ஓரிருவரின் கொள்கைக்குக் கட்டுப்பட்டுப் பலர் சேர்ந்து உழைப்பதால் தான் ஏற்படுகிறது. மனித குல மாணிக்கமான மங்காத புகழ் படைத்த மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் இந்திய மக்கள் ஒன்றுகூடிச் சுதந்திரம் பெற்றனர். இன்றைய நமது நிலையில் மகாத்மா காந்தி பின்பற்றிய முறைகளில் நாமும் நடந்து நம் இன விடுதலையை நாடுதல் மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும்."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலையில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் உரை நிகழ்த்தியபோது கூறினார்.

பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. எம். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

தமிழினமே இல்லாது அழிந்துபோவதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டுவரும் இந்நேரத்தில் நாம் ஆரம்பத்திலேயே இவற்றை எதிர்க்க ஒன்றுபட்டு முயற்சிகொள்ள வேண்டும்.

மட்டுவில் கமலாசனி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. பொன். கனகசபை சாவகச்சேரி கிராமசபைத் தலைவர், திரு. வி. சுப்பையா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

## தமிழ் உரிமை . . .

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொள்கிறார்கள். தமிழ் உரிமைக்காக ஏற்பாடு செய்யும் தமிழினத்தின் போராட்டத்தில் தமிழ் பேசும் அத்தனை பேரும் பங்குபற்ற வேண்டியது அவர்களின் கடமையாகும்.

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசும்பொழுது அரசாங்கத்தில் மட்டுமல்ல தனியார் துறையிலும் தமிழ் பேசும் வாலிபர்களுக்கு உத்தியோகம்பெறும் வசதி கிடைக்காது என்று கூறினார். தனியார் துறையில் சிங்களம் மூலம் கருமமாற்றுவதற்கு ஆரம்பித்துவிட்டனரென்றும் வாலிபர்கள் தன்னம்பிக்கையுடன் சுயமுயற்சியால் அரசாங்கத்தில் நம்பியிருக்காது உழைக்கும் வழியைக் கையாளவேண்டுமென்றும் டாக்டர் நாகநாதன் குறிப்பிட்டார்.

திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பேசியதாவது:-

தமிழ் பேசும் மக்கள்மீது சிங்களம் திணிக்கும் அரசாங்கத்துக்கு வருவாய் கொடுக்கக்கூடிய எவ்வித வழக்கத்தையோ பழக்கத்தையோ தொடர்ந்து தொடர்ந்து கைக்கொள்ளவேண்டாமென்று தமிழ் பேசும் இனத்தின் பெயரால் கேட்டுக்கொள்ளுகின்றேன். சாராயம் மூலமும், சிகரட் மூலமும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் தமிழ் பேசும் மக்கள்; அரசாங்கத்திற்குக் கொடுக்கின்றனர். தமிழ் பேசும் இனத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு அவ்வளவு பணமும் கிடைக்குமானால் பொருளாதார சுபீட்சம் பெறும் வசதியை ஏற்படுத்தலாம்.

தபால் சேமவங்கியில் தமிழ் பேசும் மக்கள் சேமிக்கும் வழக்கத்தை விடுத்து, கூட்டுறவு வங்கியில் சேமித்து வந்தால் நமது பகுதியில் ஏற்படுத்தும் தொழில்களுக்குக் கடன் வழங்க வசதி ஏற்படும். இன விடுதலைக்கு பொருளாதாரச் சுதந்திரம் மிக அவசியமானது.

திரு. எஸ். நடராசா பேசும்பொழுது சிங்களம் படிப்பவர்களை நிறுத்திவைப்பதும் சிங்களம் கற்பிப்பவர்களை அகற்றுவதும் தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேர்களினதும் கடமையென்று குறிப்பிட்டார்.

# மந்திரிக்கு யாழ். எம். பி. தந்தி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண பகுதியில் கடந்த வாரமும், இவ் வாரமும் தொடர்ந்து கூப்பன் பச்சை அரிசி விநியோகிக்கப்படுவதால் பொதுமக்களுக்கு வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுக்கோளாறு போன்ற நோய்கள் வருகிறதென்றும் ஆகையினால் பச்சைஅரிசி விநியோகம் செய்வதை தடைசெய்ய உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா உணவு மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுள்ளார்.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் வியாழன்

இம்மாதம் எட்டாந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திரு. கனகசெந்திநாதன் எழுதிய "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்னும் நூல் வெளியீட்டுவிழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் இலங்கை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறும்.

திரு. ஏ. ரி. பொன்னுத்துரையின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் தலைவரின் வெளியீட்டுரையைத் தொடர்ந்து பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, திரு. எஸ். பொன்னுத்துரை, திருமதி இராமலிங்கம் பண்டிதர் க. வேலுப்பிள்ளை, திரு சண்முகசுந்தரம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

மேற்படி நூலின் பதிப்பக ஆசிரியர் திரு. எம். ஏ. ரஹ்மான் பதிப்புரை நிகழ்த்துவார். தேவன் நன்றியுரை கூறுவார்.

## "சமாதானத்தை மேற்கொள்க"

### பாங்ஹாக் மகாநாடு ஆரம்பமானது

பாங்ஹாக், பெப். 5

மலேசியா தகராறு சம்பந்தமாக கூட்டப்பட்ட மூன்று நாட்டு வெளிவிவகார அமைச்சர்களின் மகாநாடு இன்று தாய்லாந்து வெளிவிவகார அமைச்சில் ஆரம்பமானது

சமாதான மகாநாட்டை ஆரம்பித்துவைத்த தாய் வெளிவிவகார மந்திரி உரை நிகழ்த்துகையில், சமாதான முயற்சிகளை மேற்கொண்டு இத்தகராறைத் தீர்த்துவைக்க மூன்று நாடுகளும் முன்வரவேண்டும் என்று கூறினார்.

கம்யூனிஸ்ட்

# மத்திய கமிட்டி செயலுக்கு யாழ். கிளை அங்கீகாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

திருவாளர்கள சண்முகதாசன், குமாரசிறி ஆகியோரின் தலைமையின் கீழுள்ள கட்சிவிரோத, ஐக்கிய விரோதக் கோஷ்டியினர் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எடுத்த நடவடிக்கையை அங்கீகரிக்கும் தீர்மானமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கமிட்டி அங்கத்தவர்களின் மகாநாட்டில் நிறைவேறியது.

இத்தகவலை யாழ்ப்பாண மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி கிளைக்காரியதரிசி திரு. ஐ. ஆர். அரியரத்தினம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள கட்சிக் கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி பின்பற்றும் அரசியல் கொள்கையை அங்கீகரிப்பதுடன், இந்நாட்டிலுள்ள இடதுசாரி இயக்கத்தில் சென்ற இருபது வருட காலமாக நிலவிவந்த வேற்றுமையை நீக்கி இடதுசாரி ஐக்கிய முன்னணியை அமைக்க எடுத்த முயற்சிகளையும் அங்கீகரிக்கிறதென்றும், கட்சி விரோதிகளை நீக்கி கட்சியின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்காக யாழ்ப்பாண மாவட்டக் கமிட்டி உரிய தருணத்தில் எடுத்த நடவடிக்கையை அங்கீகரிப்பதென்றும் மகாநாடு தீர்மானித்தது.

சைப்பிரஸ்

## அமெரிக்கர் வெளியேற்றம்

நிக்கோஸியா, பெப். 5

நிக்கோஸியாவில் உள்ள அமெரிக்கத் தூதராலயத்தின் முன்பாக இன்று வெடிகுண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து சைப்பிரஸிலிருந்து அமெரிக்கப் பெண்களும குழந்தைகளும் வெளியேற ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர்.